
## வரலாற்று நாயகன் ஹோசிமின் பிறந்த நாள் (19–05–1890)

# வெட்டுக்கிளிகள் மதயானையைச் சாய்க்கும்!

தலைமுறைக்கு ஒருமுறை பூக்கும் மூங்கில் பூவைப் போன்று மூங்கில் தேசமான வியட்நாம் நாட்டில் 18 ஆம் நூற்றாண்டில் பிறந்த மார்க்ஸிய போராளி ஹோசிமின் அவர்களின் 136-வது பிறந்தநாள் இன்று.

வியட்நாம் நாட்டில் வீரத்தின் விளைநிலமாகத் திகழ்ந்த புகழ்பெற்ற கியான் வட்டாரத்தின் சிம்லியன் என்ற ஊர். இங்கு வாழ்ந்த மக்கள் ஏழைகள்; ஆனால் கோழைகள் அல்ல. இங்கு வாழ்ந்த குயென் சின் காக் அவர்கள் பேரறிஞர், கன்பூசியஸ் தத்துவத்தை உள்வாங்கி, சிவில் நிர்வாகத்துறையில் 'பயோபங்' பட்டம் பெற்று 'மக்களின் நலனே தன் நலன்' என்று வாழ்ந்து வந்தார்.

இவருக்கு 19-05-1890ஆம் ஆண்டு பிறந்த ஆண் குழந்தைக்கு குயென் டாட் தாங் என்று பெயர் வைத்து மகிழ்ந்தனர். அந்தக் குழந்தையே, பின்னர் குயென் புரட்சிப் பாதையில் பல்வேறு பெயர்களில் இயங்கி 1942-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சீனப் பயணத்தின் போது வைத்துக் கொண்ட பெயர் ஹோசிமின். அதுவே நிலைத்து விட்டது.



ஹோசிமின் கன்பூசியஸ் தத்துவத்துடன் மார்க்சியத்தை உள்வாங்கி அடிமைத் தளையிலிருந்து தன் தாய் நாட்டை விடுவிக்க அமெரிக்கா, சோவியத் யூனியன், பிரான்ஸ், ஜப்பான், சீனா என்று பல்வேறு நாடுகளுக்கு நாடோடியைப் போன்று சென்று கடும் சித்திரவதை, சிறைத் தண்டனை, தலைமறைவு, மரண தண்டனை என்று பல துயரச் சிலுவைகளைத் தூக்கிச் சுமந்து, இறுதியாக மக்களைப் பண்படுத்தி புரட்சிப் பாதையில் வெற்றி பெற்ற மகத்தான வரலாற்று நாயகன் மார்க்சியப் போராளி ஹோசிமின் அவர்கள்.

உலகத்தின் சின்னஞ் சிறிய நாடு வியட்நாம். இந்தியா சீனத்திற்கு இடையே உள்ள நிலப்பரப்பு வியட்நாம். கம்போடியா, லாவோஸ் ஆகிய நாடுகள் இந்த நிலப்பரப்பில் உள்ள கனிமவளங்களை சுவீகரித்துக் கொள்ள; ஏகாதிபத்திய நாடுகளான அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான், சீனா ஆகிய நாடுகள் இப்பகுதியைத் தங்கள் காலனி நாடுகளாக ஆக்கிரமிப்பு செய்து கொண்டன. ஏகாதிபத்திய அடிவருடிகளாக உள்நாட்டு நிலப்பிரபுக்கள் நிலவுடமையாளர்களாக மாறி இருந்த காலம் அது.

'நதியிலே வெள்ளம் - கரையிலே நெருப்பு - இந்த இரண்டுக்கும் இடையே உள்ள தகிப்பைப் போன்று எதிரிகளின் முகப்புற சவாலையும் உள்நாட்டு நிலப்பிரபுக்களின் முதுகுப்புற சவாலையும் எதிர்கொண்டு ஒவ்வொரு நாட்டு ஏகாதிபத்தியத்திடம் இருந்தும் வியட்நாம் விடுதலை பெற வேண்டும்; அதற்கு பிற நாடுகளின் உதவியை எதிர்பாராமல் வியட்நாம் மக்களைப் புரட்சியில் பங்கேற்க வைக்க, மக்களைத் தயார்படுத்த, பாசறைகள் அமைத்து சுதந்திர தாகத்தை ஊட்ட, ஹோசிமின் மேற்கொண்ட போராட்டங்கள் சொல்லி மாளாதவை.

பிரான்ஸ் நாட்டு ஏகாதிபத்தியத்தின் காலனி நாடாக வியட்நாம் இருந்தபோது பிரான்ஸ் நாட்டை அறிந்து கொள்ள 1911-ஆம் ஆண்டு கப்பல் ஊழியராக பணியாற்றிக் கொண்டிருந்த ஹோசிமின், அமெரிக்கா, நியூயார்க் நகரில் கப்பலில் இருந்தபோது வேலையை விட்டு விலகி புரூக்ளின் நகரத்தில் சிலமாதங்கள் தங்கியிருந்த போது முன்னேறிய நாடான அமெரிக்காவில் நிலவிய நிறவெறியைக் கண்டு வெறுப்புற்றார்.

உலகப் போர்த் துவங்கிய 1914 காலகட்டத்தில் இங்கிலாந்து சென்ற அவர், பின்னர் 1917-ஆம் ஆண்டு பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் சென்று சேர்ந்தார்.

அப்போது மாவீரர் லெனின் தலைமையில் ஜார் மன்னனின் கொடுங்கோல் ஆட்சியை வீழ்த்தி சோவியத் யூனியன் விடுதலை பெற்ற காலம். அந்தத் தாக்கத்தின் காரணமாக 1918-ல் பிரான்ஸ் சோசலிஸ்ட் கட்சியின் உறுப்பினரானார் ஹோசிமின் இதன் மூலம் 'வியட்நாமின் முதல் சோசலிஸ்ட்' என்ற பெருமை கொண்டு பிரான்ஸில் தங்கி இருந்த காலத்தில் பல்வேறு நாட்டுப் போராளிகளின் கருத்தியலை உள்வாங்கியவர். 1921-ஆம் ஆண்டு வரை தான் பெற்ற அனுபவங்களைக் கொண்டு, 'சர்வதேச காலனி நாடுகள் லீக்' என்னும் அமைப்பை உருவாக்கி, அதன் மூலம் அடிமைத் தளையிலிருக்கும் நாடுகளை விடுதலை பெற வைப்பதற்கு உறுதுணையாக 'லேபாரிய' என்ற பத்திரிகையைத் துவங்கி புரட்சிகர கருத்தை பதிவு செய்து வெளியிட்டு வந்தார்.

உலகத்தின் முதல் பொதுவுடைமை நாடான சோவியத் யூனியன் செல்லத் திட்டமிட்ட ஹோசிமின் 1923-ஆம் ஆண்டு அந்நாட்டுப் பயணத்திற்கு ஆயத்தமாகிறார். காரணம், ஜார் மன்னனின் சர்வாதிகாரத்திற்கு முடிவு கட்டி பாட்டாளி வர்க்கம் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உரிமை முழக்கம் எழுப்பி புரட்சி வெற்றி பெற்ற நாடு சோவியத் யூனியன்.

ரஷ்யப் புரட்சி பெற்றெடுத்த பிள்ளைகளுள் வியட்நாமும் ஒன்று. மாஸ்கோ ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளின் வரவேற்பு நுழைவு வாயில். பாசிசத்திற்கு எதிராக போராடும் போராளிகளின் இரண்டாவது தாய் வீடு ரஷ்யா.

சோவியத் ரஷ்யாவின் மீது என்றைக்கு இட்லர் தாக்குதலைத் தொடங்கினாரோ, அன்றைக்கே ஜெர்மானிய நாசிசத்தின் வீழ்ச்சி தொடங்கியது. முடிவில் பாசிசம் வேரோடும் வேரடி மண்ணோடும் சாய்க்கப்பட்டு, உலகளாவிய நாடுகளில் பொதுவுடைமை ரஷ்யா பெற்ற வெற்றியின் துவக்கம் வியட்நாம் புரட்சிக்கு தொடக்கமாக அமையும் என்று உறுதியாக நம்பிய புரட்சி நாயகன் ஹோசிமின்.

பிரான்ஸிலிருந்து வெளியேறி தலைமறைவாகப் போகும் முன் தன் தோழர்களுக்கு தன் திட்டத்தை விளக்கி ஹோசிமின் கடிதம் எழுதுகிறார்.

"எனது பாசத்திற்குரிய தோழர்களே! நாம் அனைவரும் பல்வேறு நாடு, இனம், மதங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவைகளைக் கடந்தவர்களாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களாக அன்பு பாராட்டி இயங்கி வந்தோம். ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியிலிருந்து நமது தாய் நாடுகள் விடுதலை பெற வேண்டும் என்ற இலட்சிய தாகத்தோடு இணைந்து சிந்தித்து செயல் வடிவம் கொடுத்தோம். அதில் ஓரளவு நாம் முன்னேறி உள்ளோம் என்பது மறுப்பதற்கு இல்லை. ஏகாதிபத்திய காலனி நாடுகளில் இயங்கும் எமது சங்கங்கள், 'லேபாரியா' பத்திரிக்கை போன்றவை நம்பிக்கை தரும் வகையில் கணிசமான பலன்களைத் தந்துள்ளது.

நம் அனுபவத்தில் பிரான்ஸ் நாட்டின் இரண்டு முகங்களைக் கண்டோம். ஒன்று ஏகாதிபத்திய வெறிகொண்ட இறுமாப்பு, அடக்குமுறை, சுரண்டல் வெறி கொண்ட பிரான்ஸ்.

மற்றொரு முகம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்று உரைத்த ஜனநாயக பிரான்ஸ். இதுதான் உண்மையான பிரான்ஸ் நாடு. இதனை நமக்கு ஆதரவு சக்தியாக தட்டி எழுப்புவதில் வெற்றி பெற்றுள்ளோம்.

அடுத்த கட்டம் பற்றி நான் ஆலோசிக்கின்றேன். எனக்கு சரியான புரிதல் எதுவும் கிடைக்கவில்லை. மீண்டும் மீண்டும் சிந்தித்துப் பார்த்தேன் தோழர்களே! சொந்த நாட்டிற்கு எப்படியாவது சென்று அவர்களோடு இணைந்து இரண்டறக் கலந்து, மக்களை ஒற்றுமைப்படுத்தி, விடுதலைப் போராட்டத்திற்கு அவர்களை ஒன்று திரட்ட வேண்டும் என்று என் உள்ளம் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. ஆகவேதான் என் தாய் நாடு செல்கின்றேன்!.

தோழர்களே! இக்கடிதம் உங்கள் கைகளுக்குக் கிடைக்கும் போது, நான் பிரான்ஸ் நாட்டை விட்டு வெளியேறி நெடுந்தொலைவு உங்களை பிரிந்து 24 மணி நேரம் ஆகியிருக்கும்.

என தருமைத் தோழர்களே! உங்கள் அனைவரையும் பிரிந்து செல்வது மிகுந்த வருத்தமாக உள்ளது. "தோழர்களே! அடிமைச் சங்கிலியை பொடி பொடியாக்கி விட்டு நாம் சுதந்திர வீரர்களாக மீண்டும் சந்திப்போம்".

இவ்வாறு அறிவித்த அவர், 1923-ஆம் ஆண்டு ஜெர்மன் நாட்டு வழியாக சோவியத் யூனியனுக்குள் நுழைகிறார். அதன் நோக்கம் ஒன்று தான். வரலாற்று நாயகன் ரஷ்யாவின், வெற்றித் திருமகன் புரட்சியாளர் லெனின் அவர்களை எப்படியாவது சந்தித்துப் பேசவேண்டும் என்ற ஆவல். ஆனால் கடைசி வரை அவரைச் சந்திக்க முடியாமல் போய்விட்டது.

21.01.1924 அன்று மாவீரர் லெனின் இயற்கை எய்தினார். அவரின் உயிரற்ற உடலுக்கு உறை பனியில் கடும் குளிரில் சென்று அஞ்சலி செலுத்தி நினைவிழந்து மயக்கம் உற்றார் ஹோசிமின்.

1925 ஜூன் மாதம் லெனினியப்பாதையில் வியட்நாம் விடுதலையை விரும்பும் இளைஞர்களைக் கொண்டு 'வியட்நாம் புரட்சிகர இளைஞர் சங்கம்' உருவாக்கி 'தான் நியென்' என்னும் பத்திரிக்கையைத் தொடங்கி அதன் மூலம் விடுதலை தாகத்தைக் கிளர்ந்து எழச்செய்ய எழுதினார்.

1927-ஆம் ஆண்டு காலனி நாடுகள் மீது பிரெஞ்சு ஏகாதிபத்தியம் இழைத்து வரும் கொடுமைகளை விவரித்து 'பிரெஞ்சு காலனியத்தின் மீதான விசாரணை' என்ற நூலை எழுதி வெளியிட்டார். விடுவார்களா?

ஏகாதிபத்தியம் தன்னை எதிர்க்கும் கருத்தியலை, நபரை, இயக்கத்தைவிட்டு வைக்காமல் முளையிலேயே அழித்து ஒழித்து விடுவார்கள்.

இக்காலகட்டத்தில் மாஸ்கோவில் நடைபெற்ற பிரான்ஸ் எதிர்ப்பு மாநாட்டில் பங்கேற்று தீர்க்கமான முடிவோடு 1938-ல் ரஷ்யாவில் இருந்து புறப்பட்டு ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்து போராடும் சீன உதவியை நாடிச் சென்றபோது ஹியாங் கே ஷேக் தலைமையிலான அரசு ஹோசிமின் அவர்களைக் கைது செய்து கொடுமையான சித்திரவதைகளை கொடுத்தது. அவரை விடுவிக்க மேற்கொண்ட போராட்டங்கள் எளிதில் பயனளிக்கவில்லை.

சோவியத் ரஷ்யா மீது 1943-ஆம் ஆண்டு போர் தொடுத்த நாஜிக்கள் செஞ்சேனையால் தோற்கடிக்கப் பட்ட போது ஹோசிமின் விடுவிக்கப்பட்டார்.

30 ஆண்டுகள் கழித்து 1944-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தன் தாய்நாடு வியட்நாம் திரும்பிய அவர், புரட்சிப் படைகளை உருவாக்கினார். அதன் மூலம் கொரில்லா யுத்தப் பயிற்சி அளிக்கப்பட்டது.

1945 ஆகஸ்ட் 16 ஜப்பான் சரணடைந்தது. 1945 செப்டம்பர் 2 இரண்டாயிரம் ஆண்டுகால முடியாட்சியை 80 ஆண்டுகால காலனி ஆட்சியை சில ஆயிரம் பேர் கொண்ட புரட்சிப் படை வென்றது. மக்கள் எழுச்சி கொண்டனர். ஹோசிமின் தலைமையில் இடைக்கால அரசு உருவாக்கப்பட்டது. 'வியட்நாம் வியட்நாமியருக்கே - உழுபவனுக்கே நிலம் சொந்தம்' என்று அறிவித்து நிலம் அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது.

1946 ஜனவரி 6 ஆம் நாள் வியட்நாமில் நடைபெற்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெற்ற அவர் 1950-ஆம் ஆண்டு அனைத்து நாட்டுத் தலைவர்களுக்கும் கடிதம் எழுதி தூதரக உறவை ஏற்படுத்தினார்.

'மரம் ஓய்வு எடுக்க விரும்பினாலும் காற்று விடுவதாக இல்லை' என்ற மாவோவின் பொன்மொழிக்கு இணங்க மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பதைப் போன்று பிரான்ஸ் நாட்டின் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் களமாடினார்.

"நான் ஒரு படகோட்டி. தந்தையர் நாட்டை இந்தப் புயலுக்கு மத்தியில் பத்திரமாக ஓட்டிச் சென்று அக்கரையில் சேர்த்து, மக்களை மகிழ்விக்க வேண்டும். என்னுடைய வாழ்க்கை முழுவதும் ஒரே குறிக்கோள் தான். அது, என் வாழ்க்கை மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதுதான்.

நம் முன்னோர்கள் விட்டுச் சென்ற இந்த வளமிக்க நாட்டை நாம் புனர்நிர்மாணம் செய்து உலகில் உள்ள ஏனைய நாட்டு மக்கள் முன்னேறி உள்ளதைப் போன்று நாமும் முன்னேற்றுவோம். சுதந்திரத்தை இழந்து அடிமைகளாக இருப்பதைக் காட்டிலும் எல்லாவற்றையும் தியாகம் செய்து விடுதலை பெறுவோம். எதிரி பலவானாக இருந்தாலும் நாம் செய்யப்போகும் தியாகத்தால் வெற்றி பெறுவோம்.



**மல்லை சி.ஏ. சத்யா**
துணை பொதுச் செயலாளர்
மறுமலர்ச்சி தி.மு.க.

தங்க நட்சத்திரக் கொடி காற்றில் அசைந்தாடுகிறது. எதிர்ப்பின் பேரிகை முழக்கம் எங்கும் ஒலிக்கிறது. அனைத்து மக்களும் பங்கேற்கும் எதிர்ப்பு நடைபெறுகிறது. உறுதியான மனதுடன் ஒற்றுமையுடன் வீரர்களும் மக்களும் அணிவகுத்து முன்னேறுங்கள். தற்சமயம் நமது எண்ணிக்கையும் சக்தியும் அதிகரிக்கிறது. நீண்ட எதிர்ப்பு வெற்றி பெற்று தேச ஒற்றுமை பூர்த்தியாகும்.

தேச ஒற்றுமையின் பலத்தை ஆதாரமாகக் கொண்டு போர்த் திட்ட திசை வழியில் உறுதியாக இருந்து கொள்கையில் உறுதியுடனும், செயல் தந்திரத்தில் நெகிழ்ச்சியுடனும் இருந்து எதிரியின் அணிவகுப்பில் உள்ள முரண்பாடுகளை திறமையுடன் பயன்படுத்தி, ஊடறுத்து, உள்ளே சென்று, அவர்களைப் பிரித்து, அதில் மிகவும் ஆபத்தான எதிரிகளை முற்றிலும் தனிமைப்படுத்தி அழித்தொழித்து புரட்சிகர அதிகாரத்தை தக்க வைப்பதற்கும் வலுப்படுத்துவதற்கும் சாதகமான நிலைமைகளை உருவாக்குவோம்.

எதிரியின் பலம் அணையப் போகின்ற விளக்கைப் போன்று ஆணவம் அதிகாரம் இருந்தாலும் அது மறையப் போகிறது. நம்முடைய பலம் என்பது அணைவிட்ட நீர் போன்றது. புயல் தொட்ட நெருப்பை போன்றது. வில்லிலிருந்து புறப்பட்ட அம்பைப் போன்றது.

ராணுவம் மக்களிடம் இருந்துதான் உருவாகிறது. மக்களுக்காக போர் செய்கிறது. அந்த ராணுவமும் மக்களும் மீனும் தண்ணீரும் போன்றவர்கள் என்று வியட்நாமிய வீரர்களுக்கு எழுச்சியூட்டினார்.

'வெட்டுக்கிளிகள் மதயானையை சாய்க்கும்; சிட்டுக் குருவிகள் வல்லூறை வீழ்த்தும்' என்ற பொன்மொழிக்கு ஒப்ப - புரட்சிப் படையுடன் விவசாயிகள் விவசாய கூலித் தொழிலாளர் வர்க்கமும் இணைந்து 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரஞ்சு படையை 'தி யென் பி யென் யூ' என்னும் இடத்தில் சுற்றி வளைத்து எங்கும் நகர முடியாமல் இருந்த இடத்தை விட்டு அசைய முடியாமல் இருக்க வியூகம் அமைக்கப்பட்டு ஏழைக் குடியானவர்களின் உதவியோடு யாருக்கும் தெரியாமல் 300 கிலோமீட்டர் தூர சாலையும், தற்காப்புக்கான பதுங்கு குழிகளையும் அமைத்து 1954 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் தேதி பிரஞ்சுப் படையின் மீது திடீர் தாக்குதலை நடத்தி, நிலைகுலைய வைத்து இருபதுக்கும் மேற்பட்ட பிரான்ஸ் நாட்டு ராணுவ விமானங்களை ஓடுபாதையில் சுட்டு வீழ்த்தி, 55 நாட்களாக நடைபெற்ற போரில் இறுதி வெற்றியை வியட்நாம் தனதாக்கிக் கொண்டு போர் நிறுத்தத்தை முந்தி அறிவித்தது மூன்றாவது நாட்டின் தலைமையில் பேசத் தயார் என்று அறிவித்தார் ஹோசிமின்.

'இந்தப் போர் எங்கள் மீது திணிக்கப்பட்டதாகும். எங்களது சுதந்திர உரிமையை பாதுகாத்துக் கொள்ளவே ஆயுதம் ஏந்தி போர்க்களத்தில் நிற்கின்றோம். நாங்கள் இறுதி வெற்றி பெறும் வரை போராடுவோம்" என்று வியட்நாமிய புரட்சி வீரர்கள் உறுதியாக இருந்தனர்.

பின்னர் சோவியத் யூனியன் முன்னெடுப்பில் சர்வதேச மாநாட்டை ஜெனிவாவில் 1954 ஜூலை மாதம் 17 ஆம் தேதி முன்னெடுத்து வியட்நாமின் அமைதியை நிலைநாட்டவும் சுதந்திரத்திற்கு உறுதி அளித்தும் வடக்கு தெற்குப் பகுதிகளை இணைத்து பொதுத் தேர்தலை நடத்தி சுதந்திர இறையாண்மை கொண்ட புதிய ஆட்சியை மலர செய்ய முடிவு எடுக்கப்பட்டது. தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

1954 ஜூலை மாதம் கொரில்லாப் படை வீரர்களுக்கு பாராட்டு தெரிவித்து விட்டு தலைநகர் ஹானோய்க்கு தனது படை வீரர்களுடன் சென்றபோது வியட்நாமின் வீரப் புதல்வன் 'ஹோசிமின் வாழ்க' என்று மக்கள் மலர் தூவி வரலாற்று நாயகனை வரவேற்றார்கள்.

ஜெனிவா ஒப்பந்தத்தின்படி தேர்தலை எதிர்பார்த்தார்கள். ஆனால் வியட்நாம் முழுமைக்கும் விடுதலை கொடுக்க அமெரிக்கா விரும்பாமல் தங்களுக்குச் சாதகமான பொம்மை அரசை தெற்கு வியட்நாமில் பேராசிரியர் 'கோதின் தி யெம்' தலைமையில் உருவாக்கி குழப்பத்தை விளைவித்தது!

அதனால் அமெரிக்காவிற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் கிளர்ச்சிகளும் வியட்நாமில் முழு வீச்சாக நடைபெற்றது. 1960-ஆம் ஆண்டு அமெரிக்கக் கட்டுப்பாட்டில் இருந்த தெற்கு வியட்நாமை மீட்க யுத்தம் மூண்டது

இந்தப் போர் ஆண்டுகள் பலவாக நீடிக்கலாம். நாட்டின் வளங்கள் முற்றிலுமாக அழியலாம். ஆனால் நாம் உறுதியுடன் இறுதிவரை போராட வேண்டும். நாட்டு விடுதலையைக் காட்டிலும் உலகில் வேறு ஒன்றும் பெரிதில்லை" என்று வானொலியில் பேசினார் ஹோசிமின். அவரது உரை கேட்டு 10 லட்சம் மக்கள் கிளர்ந்து எழுந்து வீதிக்கு வந்தனர்.

ஏகாதிபத்திய நாடான அமெரிக்காவை எதிர்த்துப் போராட சோசலிச நாடான சோவியத் ரஷ்யாவும் ஏனைய சோசலிச நாடுகளும் துணை நின்றன ஆயுதப் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கி உதவின, ஆதரவு சக்தி கிடைத்த மாத்திரத்தில் வியட்நாமிய மக்கள் வீதிக்கு வந்து போராடினார்கள்

அதே வேளையில் எதிர்பாராத விதமாக ஹோசிமின் அவர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டு நினைவுப் பிறழ்ச்சி ஏற்பட்டது. தனக்கு நினைவு வரும்போதெல்லாம் அமெரிக்காவுக்கு எதிரான தெற்கு வியட்நாம் போரைப் பற்றியே கேட்டுக் கொண்டு இருந்த தலைவர் ஹோசிமின் போரில் வெற்றிபெற்று வடக்கு தெற்கு வியட்நாம் ஒன்றுபட்ட நாடாக இருக்க வேண்டும் என்ற தனது விருப்பத்தைச் சொல்லி உயிர் துறந்தார்.

'நடுங்காத மனங்களே மகத்தான ஆயுதம்' என்பதற்கு இணங்க

ஏகாதிபத்திய அணுஆயுத வல்லரசு நாடுகளான பிரான்ஸ் ஜப்பான் சீனா உள்ளிட்ட நாடுகளை எதிர்த்து திகைக்க வைக்கும் வீரம் செறிந்த சமர்க்களங்களைச் சந்தித்த புரட்சியாளர் ஹோசிமின் அவர்கள் தலைமையில் விடுதலையை தரிசித்த வியட்நாமியர்கள் தங்கள் தலைவனிடம் பெற்ற அனுபவத்தைக் கொண்டு

ஹோசிமின் அவர்கள் மறைவிற்குப் பின்னர் அவரின் உடல் பாடம் செய்யப்பட்டு பாதுகாத்து வருகின்றனர். அதன் எதிரே வியட்நாம் பாராளுமன்றம் தங்க நட்சத்திரம் பதித்த செங்கொடி பறந்து கொண்டு இருக்கிறது .

கடந்த நூற்றாண்டில் அடிமைத் தளத்தில் இருந்து விடுதலை பெற்ற நாடுகளில் சின்னஞ் சிறிய வியட்நாம் நாட்டுப் புரட்சி மகத்தானது.

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மன், போர்ச்சுக்கல் போன்ற அப்போதைய வல்லரசு நாடுகளுக்கு இந்திய நாடு அடிமைப்படுத்தப் பட்டது போன்று வியட்நாம் நாடு அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான், சீனா போன்ற வல்லரசு நாடுகளுக்கு அடிமைப் படுத்தப் பட்டு ஆயுதப் புரட்சியின் மூலம் விடுதலையைத் தரிசித்தது.

வியட்நாம் மக்கள் ஆயுதங்களை வெடிகுண்டுகளை சுமந்து செல்லவில்லை. வெடிகுண்டுகளாக மாறினார்கள் பின்னங்கால் பிடரியில் அடிபட அலறி ஓடின. ஏகாதிபத்திய நாடுகள்.

இந்திய விடுதலைக்குப் பின்னர் இந்த நாட்டிற்கு 'காந்தி தேசம்' என்று பெயர் வைக்கச் சொன்னார் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்கள். அது நடைபெறவில்லை.

வியட்நாமில் இந்த நகரத்தின் பழைய பெயர் சைக்கோன். புரட்சிக்குப் பின்னர் தங்கள் நாயகன் ஹோசிமின் அவர்களின் கனவை நனவாக்கி, நன்றிக் கடனாக அவர் இல்லாத சூழலில் அவரின் பெயரை 'ஹோசிமின் நகரம்' என்று வைத்து மகிழ்ந்தனர்.

நீண்ட நாள் போராட்டத்திற்கு தயாராகும் வகையில் பூமிக்கடியில் பதுங்கு குழிகளையும் சுரங்கப் பாதைகளையும் அமைத்து, உணவு மறுத்து கிழங்குகளை சாப்பிட்டு பூமிக்கடியில் இருந்து திடீரென்று வெளியே வந்து கொரில்லா முறையில் திடீர் தாக்குதலை நடத்தி ஆக்கிரமிப்பாளர்களை நிலைகுலைய வைத்து விட்டு மீண்டும் பூமிக்கடியில் சென்று கண்ணாமூச்சி காட்டி மறைந்து இருந்தனர் வியட்நாம் கொரில்லாப் போராளிகள் .

ஹோசிமின் மாகாணத்தின் ஒரு மாவட்டம் கி யூ ச்சி அடர்ந்த காட்டுப் பகுதி. இந்தப் பகுதியில் அமெரிக்க இராணுவம் நடத்திய கோரமான தாக்குதல் சொல்லி மாளாது அதன் விளைவே, எளிய குடியானவர்களை ஆயுதபாணிகளாக்கி கொரில்லா போராளிகளாக்கியது .

கி யூ ச்சி மக்களை அழித்தொழிக்க அமெரிக்கா டன் கணக்கில் பயன்படுத்திய TOXIC CHEMICALS டாக்ஸி ரசாயன தாக்கம் இன்றும் இருக்கிறது. வியட்நாமியர்களின் உடலில் ரசாயனம் கலந்து இருக்கிறது . அது முற்றாக அகல இன்னும் சில நூற்றாண்டுகள் ஆகலாம் என்று சொல்கிறார்கள் .

பூமிக்கடியில் ஏறக்குறைய 250 கிலோமீட்டர் சுரங்கம் தோண்டி கிராமங்களை உருவாக்கி உள்ளேயே வாழ்ந்து போர்ப் பயிற்சியில் ஈடுபட்டனர்.

மூன்று தளங்களாக நிலவரை அமைத்து உள்ளனர். முதல் நிலை 4 நான்கு மீட்டர் ஆழம். இரண்டாம் நிலை 6 ஆறு மீட்டர் ஆழம். நான்காம் நிலை எட்டு மீட்டர் அதற்கு கீழே ஒரு நதியோடு இணைத்து இருந்தனர்.

உள்ளே கூட்ட அரங்கம், மருத்துவமனை, சமையல் கூடம், முக்கோண வடிவிலான நிலவறையில் போரில் பங்கேற்காத முதியவர்கள், பெண்கள், குழந்தைகள், காயமுற்றவர்களைத் தங்க வைத்தனர்.

இரண்டு அடிக்கும் குறைவான சுற்றளவு குகையில் வியட்நாமியர்களின் மெலிந்த உடல்வாகு எளிதாகச் செல்லமுடியும் .

கரையான் புற்றுகள் இருக்கும் இடத்திற்கு கீழே, பட்டுப் போன மரத்திற்குக் கீழே உயிர் காற்று ஆக்சிசன் செல்வதற்கு துளை இட்டனர். சமையலறையில் இருந்து புகை வெளியேற எளிதில் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு தொழில்நுட்பப் புரட்சியை விரும்புகின்றா வரலாற்று பேராசிரியர்கள் அவசியம் பார்க்க வேண்டிய இடம்.

ஒரு சில சிறிய தூர சுரங்கம் நிலவறையை பிரத்யேகமாக சுற்றுலாப் பயணிகள் உள்ளே சென்று பார்வையிட வைக்கின்றனர். உடல் பருமன் உள்ளவர்கள் ஆஸ்த்துமா உள்ளிட்ட சில குறைபாடு உள்ளவர்கள் உள்ளே செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுவர். இங்கு சாதாரண குடிமக்களாக வருபவர்கள் உள்ளே சென்று திரும்பும் போது ஒரு போர் வீரனைப் போன்று தான் திரும்புவார்கள்.

மகாபாரதம்

மகாபாரதத்தில் ஒரு காட்சி. பாண்டவர்களை அழித்தொழிக்க சகுனியின் ஆலோசனையில் துரியோதனின் ஆணைப்படி பாண்டவர்களை காட்டிற்கு சென்று தங்கி வர ஏற்பாடு செய்கின்றான் . தேவ சிற்பி விஸ்வகர்மா, அசுர சிற்பி மயன் போன்று மகாபாரதத்தின் கௌரவ சிற்பக் கட்டிடக் கலைஞன் புரோசனன், அவனைக் கொண்டு பாண்டவர்கள் தங்கும் வீட்டை வடிவமைக்கின்றான். அது எளிதில் தீப்பற்றி எரியக்கூடிய அரக்கு மாளிகை . இதை அறிந்த விதுரன் பாண்டவர்களைக் காக்கும் பொருட்டு சில சங்கேத மொழியில் தருமனுக்கு எச்சரித்து ஆலோசனை வழங்குகின்றார்.

அரசியலில் அறிவியலுக்கு ஏற்ப எதிரியின் திட்டங்களை முன் கூட்டியே அறியும் ஞானம் வேண்டும். ஒருவரை கொலை செய்வதற்கு இரும்பால் செய்யப்பட்ட கூரிய ஆயுதம் மட்டுமல்லாமல் வேறு வகைகளும் உள்ளன. அதை அறிந்து வைத்துக் கொள்ள வேண்டும் .

இது அடர்ந்த காட்டுப் பகுதி என்பதால் வைக்கோலையும் மரத்தையும் உண்பவன் (நெருப்பு) கடும் பனியை உலர்த்துபவன் (சூரியன்) இவற்றால் கானகத்தில் பூமியில் துளையிட்டு வசிக்கும் எலி, முயல், முள்ளம்பன்றி, நரி, பாம்பு போன்ற ஜீவராசிகளை அழிக்க முடியாது. இதை அறிந்தவன் அடர்ந்த கானகத்தில் நட்சத்திரங்களின் துணை கொண்டு திசையை அறிந்து பாதுகாப்பாக வாழ்ந்திருப்பான் என்ற விதுரனின் எச்சரிக்கையை தேவ வாக்காக எடுத்துக் கொண்டு பகலில் சூரிய ஒளியால் அரக்கு மாளிகை எளிதில் தீப்பற்றி எரியக்கூடும் எனவே பகல் முழுவதும் வேட்டை ஆட வெளியே சுற்றுவது

இரவில் நெருப்பால் எரிக்க முடியும் எனவே இரவு நேரத்தில் அரக்கு மாளிகையில் சுரங்கம் தோண்டி வைத்துக்கொள்வர்

கௌரவர்களின் திட்டத்தை செயல்படுத்துவதற்கு பாண்டவர்களுடன் அரக்கு மாளிகையில் தங்கி இருந்த புரோசனன் மற்றும் அவன் குடும்பத்தினர் அயர்ந்து தூங்கிக் கொண்டு இருந்த போது பாண்டவர்கள் முந்திக்கொண்டு அரக்கு மாளிகையை தீ வைத்து எரித்து விட்டு சுரங்கத்தின் வழியே தப்பி வெளியேறி பின்னர் கௌரவர்களைப் பகை முடித்தனர் என்று மகாபாரதம் சொல்கிறது.

வியட்நாமியர்கள் மகாபாரதத்தை, வியாசரை அறிந்து வைத்து இருந்தனரா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் ஒரு சகாப்தத்தின் சாட்சியாய் புரட்சியின் பிரதிபிம்பமாய் திகழும் புதியதோர் வியட்நாம் வரலாற்றை நாம் வாழும் காலத்தில் அதே வழியில் உயிர்களை பலி கொடுத்து வியட்நாம் தாயக விடுதலைக்கு மண்ணின் மைந்தர்களே இறுதி வெற்றி பெற்றார்கள். ஆக்கிரமிப்பாளர்கள் புறமுதுகிட்டு ஓடும் நிலை.

அமெரிக்க வல்லரசு சின்னஞ் சிறிய வியட்நாட்ம் மீது ஆதிக்கம் செலுத்தி 50 ஆயிரம் படைவீரர்களை பலிகொடுத்து தோல்வியைத் தழுவி வெறுங்கையுடன் நாடு திரும்பிய நிலை.

ஒரு பக்கம் கொரில்லா, யுத்தம் மறுபக்கம் குடிமக்கள், சைக்கோன் நகரத்தைச் சூழ்ந்து பல்லாயிரக்கணக்கானவர்கள் சூழ்ந்து அமெரிக்க தூதரகத்தை முற்றுகையிட்டு தகர்க்க வந்த போது அமெரிக்க தூதுவர் தன் வீட்டின் மாடியில் இருந்து ஹெலிகாப்டர் மூலமாக உயிர் தப்பி ஓடினார். வியட்நாம் புரட்சி வெற்றி பெற்றது.

1975 ஏப்ரல் 30 ஆம் நாள் தெற்கு வியட்நாம் தலைநகர் சைக்கோனில் பொன்னிற நட்சத்திரம் பொறிக்கப் பட்ட செங்கொடியை ஏற்றி வைத்து தங்கள் தலைவர் ஹோசிமின் அவர்கள் கண்ட கனவை வியட்நாமில் மக்கள் நனவாக்கினார்கள்.

**ஹோசிமின் புகழ் ஓங்குக**
**புரட்சி வெல்க**




சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் (16.05.2025) அன்று, தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வின் போது சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர்.க.மணிவாசன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் 15.05.2025 அன்று சென்னை, நந்தனம், தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற கால்நடை பராமரிப்புத் துறை தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில், கால்நடை பராமரிப்புத் துறையில் 34 நபர்களுக்கு பதவி உயர்வுக்கான ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அரசு செயலாளர் மரு. ந. சுப்பையன், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் இரா. கண்ணன், கால்நடை பராமரிப்பு துறை கூடுதல் இயக்குநர்கள், மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.